செ.வெ.எண்:34 நாள்.18.08.2019

<u>பத்திரிகைச் செய்தி</u>

# மற்றவர்களுக்கு இணையாக மாற்றுத்திறனாளிகளும் பல்வேறு சாதனைகளை செய்ய முடியும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் பேச்சு.

------------

கடலூர் நகர அரங்கில் நடைபெற்ற 8-வது ஆண்டு மாற்றுத்திறனாளிகள் சுயம்வரம் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் தலைமையில் இன்று (18.08.2019) நடைபெற்றது.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் தெரிவித்ததாவது.**

மறைந்த மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நடைபெறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு மாற்றுத்திறனாளிகளுக்காக எண்ணற்ற திட்டங்களை தொடர்ந்து செயலாற்றி வருகிறது. மாற்றுத்திறனாளிகளும் மற்றவர்களுக்கு இணையாக பல்வேறு சாதனைகளை செய்ய முடியும். இன்று மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு சுயம்வரம் நடத்தி அவர்களுக்குள் ஒத்த கருத்து ஏற்படுத்தி, அவர்களுக்கு திருமண நிகழ்ச்சி 8-வது ஆண்டாக நடைபெற்று வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

மாற்றுத்திறனாளிகள் தங்கள் வாழ்வில் தன்னம்பிக்கையுடன் நடைபோட வேண்டும் என்பதே எங்களைப்போன்றவர்களின் ஆசை. மற்றவர்களுக்கு இணையாக மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் சிறந்த சாதனையாளர்களாக உருவாக வேண்டும் என தெரிவித்தார்.

இந்த மாற்றுத்திறனாளிகள் சுயம்வரம் நிகழ்ச்சியில் 5 மாற்றுத்திறனாளி ஜோடிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இ.ஆப.., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சீனிவாசன், மாற்றுத்திறனாளி சங்க நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.**